# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 232/2023 நாள்.25.03.2026

## DW1- திரு.ரவி, த/பெ. திரு.ராகவன்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் திருவெறும்பூர் வேங்கூரில் வசித்து வருகிறேன் என்றால் குடும்பம் மட்டும் அங்கு உள்ளது நான் கோவிலடியில் வசித்து வருகிறேன். அந்த வீடு எங்கள் குடும்பத்திற்கு சொந்தமா என்றால் என் மனைவிக்கு சொந்தம். அந்த விலாசத்தில்தான் எனக்கு குடும்பஅட்டை ஆதார்கார்டு உள்ளது என்றால் இல்லை கோவிலடி விலாசத்தில் உள்ளது. என் தகப்பனார் விவசாயதுறையில் பணிபுரிந்தார் என்றால் ஆமாம். அவர் பணியிலிருக்கும்போதே இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவர் பார்த்தவேலை எனக்கு கருணை அடிப்படையில் கிடைத்தது என்றால் ஆமாம். நான் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன் என்றால் ஆமாம். என் உடன் பிறந்தவர்கள் 5சகோதரிகள் என்றால் ஆமாம். 1வது சகோதரியும், 2வது சகோதரியும் 10 வகுப்பு படித்தவர்கள் என்றால் 1வது சகோதரி 10 ஆம் வகுப்பு படித்தள்ளார், 2வது சகோதரி 7, 8வதுதான் படித்துள்ளார். எனக்குஅடுத்த இளைய சகோதரி 10ஆம் வகுப்பு படித்துள்ளார் என்றால் இல்லை 7ஆம் வகுப்பு படித்துள்ளார். நான் 1984 பணியில் சேர்ந்தேன் என்றால் ஆமாம். எனக்கு சம்பளம் வந்தது, என்ன வகையில் வேறு வருமானம் வந்தது என்று ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அது விபரத்தை என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ஆமாம். சொத்து வாங்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இருந்தது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் இல்லை என்றால் இல்லை. என் தாயார் அனுசியாவுக்கு எழுதபடிக்க தெரியாது என்றால் தெரியும். அவருக்கு கையெழுத்து மட்டும்தான் போடதெரியும் என்றால் சரியல்ல எழுத்துகூட்டியும் படிப்பார். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டபோது அவருக்கு வயது 81 என்றால் ஆமாம். என் தாயாருக்கு வயோதிகத்தின் பார்வை குறைபாடும், செவிபுலன் குறைபாடும் உள்ளது என்றால் அப்போது இல்லை. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியகாலத்தில் எனது தாயார் கோவிலடியில் இருந்தார் என்றால் ஆமாம் என்னோடு இருந்தார். வா.சா.ஆ.1 ஆவணம் திருகாட்டுபள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியபட்டது என்றால் ஆமாம். திருகாட்டுபள்ளியில் சார்பதிவு அலுவலகத்தின் அருகில் ஆவண எழுத்தர் நிறையபேர் உள்ளார்கள் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியது பூதலூரில் என்றால் எழுத்தர் அங்குதான் வசிக்கிறார். ஆவணத்திலும் அந்நாரின் அலுவலக விலாசம் பூதலூர் என்று

உள்ளது என்றால் பூதலூர்காரர்தான் எழுதினார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எல்லா பக்கத்திலும் தட்டச்சுக்கு கீழே ஒரு இன்ச் இடம்விட்டு கையெழுத்து பெறபட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1ஆவணத்திற்கு வாசகம் சொன்னது நான்தான் என்றால் ஆமாம் அம்மா சொன்னதை சொன்னேன். செட்டில்மெண்ட் ஆவணத்தில் ஏற்கனவே பழைய ஆவணங்களை நான்தான் சொன்னேன் என்றால் சொல்லவில்லை ஆவணங்களையே கொடுத்துவிட்டேன். மூலபத்திரங்களை என் தாயாரிடமிருந்து அவருக்கு தெரியாமல் நான் எடுத்துபோய்விட்டேன் என்றால் இல்லை. என் தகப்பனாரின் வேலையை எனக்கு வாங்கி கொடுத்ததால் தாயாருக்கு எனக்கு சொத்து கொடுக்க எண்ணம் இல்லை என்றால் அப்படியில்லை. எனக்கு வேலையும் வாங்கி கொடுத்து மொத்த சொத்தையும் எனக்கு கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. சகோதரிகள் 5பேருக்கும் எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று வருவாய்கோட்டாட்சியர் தஞ்சாவூர் மனு கொடுத்தார் என்றால் ஆமாம். அந்த விசாரணை எனக்கு சார்வானது என்றால் ஆமாம். தற்போத என்னிடம் காண்பிக்கபடும் மனு அது என்றால் சாட்சி மனுவை படித்து பார்த்துவிட்டு அந்த மனுதான் என்று ஒப்புகொள்கிறார் அது **வா.சா.ஆ. 15** ஆகும். சாட்சி மீண்டும் அந்த மனுவை நான் பார்க்கவில்லை என்கிறார். அந்த மனுவில் வாதி நான் கடன் பத்திரம் என்று ஏமாற்றி வாங்கிவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அப்படிதான் சொல்லியுள்ளார். வருவாய்கோட்டாட்சியர் உத்தரவிலும் நான் ஏமாற்றி எழுதி வாங்கியதாக கண்டுள்ளது என்றால் இல்லை. அந்த உத்தரவுக்கு எதிராக நான் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த மேல்முறையீட்டிலும் எனது தாயார் நான் ஏமாற்றி எழுதி வாங்கியுள்ளதாக கட்சி செய்துள்ளார் என்றால் ஆமாம். சென்னை உயர்நீதிமன்ற உத்தரவில் சிவில் நீதிமன்றத்தை அணுகுவகுதற்கு அனுமதி கொடுக்கபட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகள் என்னுடைய பள்ளி தோழர்கள் என்றால் ஆமாம். கோவிலடி, திருகாட்டுபள்ளியிலும் எனக்கு உறவினர்கள் உள்ளார்கள் என்றால் உள்ளார்கள். அவர்களை நான் சாட்சியாக அழைக்கவில்லை என்றால் அவர்களுக்கு வேலை இருக்கிறது என்று சொன்னார்கள். என் அம்மா வீட்டில் மாடு வைத்து பால் வியாபாரம் செய்தார் என்றால் ஒருமாடுதான் இருந்தது வீட்டிற்கு மட்டும்தான் பயன்படுத்தினார். கிராமத்தில் எனது தாயார் சீட்டு பிடிப்பார் என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது தாயாரின் சுயசம்பாத்தியத்தில் வாங்கபட்டது என்றால் இல்லை. சொத்துக்களை என் 5சகோதரிகளுக்கும் சமமாக பிரித்து செட்டில்மெண்ட்

ஆவணம் எழுதி பதிவுக்கு தாக்கல் செய்தார் என்றும் நான் தடை செய்ததால் பதிவாகவில்லை என்றால் நான் தடை கொடுக்கவில்லை. என் தாயார் எனக்கு செட்டிமெண்ட் பத்திரம் எழுதி வைக்கவில்லை என்றும், கடன் பத்திரம் என்று நான் அழைத்துபோய் எழுதிகொண்டேன் என்றால் இல்லை. என் தாயார் கடன் பத்திரம் என்று நம்பிதான் கையெழுத்துபோட்டார் என்றும் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைக்கும் எண்ணம் அவருக்கு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.25 16:20:32 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**